★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

'ராகுகால' மூட நம்பிக்கைக்காக சர்க்கார் வேலை தடைபடக்கூடாது

மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா வரவு - செலவுத் திட்டத்தை சட்டசபையில் தாக்கல் செய்து பேச எழுந்ததும், ராகுகாலம் கழியும்வரை காத்திருக்குமாறு, ஒரு உறுப்பினர் கோரினர்.

சீனிவாச அய்யங்கார் என்ற பி. சோ. உறுப்பினர் மூட நம்பிக்கைகள் காரணமாக, சர்க்கார் அலுவல்கள் தடைப்படக் கூடாது என்று கூறினர். சபைத் தலைவர் இதை ஏற்றுக்கொண்டதால் அனுமந்தையா பேசத் தவங்கியிருக்கிறார்.

மலர் 3] சென்னை: மாசி 1௨ புதன் (14—3—56) ★ ★ வெளியூர்: பங்குனி 2௨ வியாழன் (15—3—56) [இதழ் 232

பீர்மேடு சென்னையுடன் இணையாததால்!

தட்சிணப்பிரதேச யோசனைக்கு கன்னட காங்கிரசார் எதிர்ப்பு

யோசனையைக் கைவிட 21 சட்டமன்ற உறுப்பினர்கள் நேருவுக்குக் கடிதம்

மைசூர், ஐதராபாத், பம்பாய், குடகு, சென்னை இங்கெல்லாம் சிதறிக்கிடக்கும் கர்நாடக மக்கள் வாழும் பகுதிகளை இணைத்த ஐக்கிய கர்நாடக மாநிலமே, லட்சோபலட்சம் கன்னடியரின் இதயகீதமாகும். கன்னட மக்களின் இந்த விருப்பத்திற்குச் சிறிதும் பொருந்தாதது, தட்சிணப்பிரதேச யோசனை.

கேரளத்தையும் கர்நாடகத்தையும் இணைக்கும் திட்டத்தை, கன்னட மக்கள் ஏற்கமுடியாது. பூகோள கலாச்சார ரீதியாகப் பார்த்தாலும், நிர்வாக வசதி, பொருளாதார முன்னேற்றம், மக்களின் விருப்பம் இவற்றைக்கொண்டு பார்த்தாலும் கேரள—கர்நாடகம் இணையும் தட்சிணப்பிரதேச யோசனை தீங்குப் பயப்பதாகும். எனவே, பிரதமர் நேரு இந்த யோசனைக்கு உடனடியாக தலைமுழுக்குப் போடவேண்டும் என்று, கர்நாடகத்தில் உள்ள 21 காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் கையொப்பமிட்டு பிரதமர் நேருவுக்கு கடிதம் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

கையொப்பமிட்டிருப்போரில் சட்டசபை உதவித் தலைவர், இரு உதவி மந்திரிகள், முன்னாள் மந்திரிகள் இருவர் உள்ளனர்.

மூன்றும் படிவம் வரை இலவசக் கல்வி

ஆந்திர முதன் மந்திரி அறிவிப்பு

மூன்றும் படிவம் (பாரம்) வரை ஆந்திர மாநிலத்தில் கல்வி இலவசமாகப் போதிக்கப்படும். குழந்தைகள், பெரியோர்கள் எல்லோருக்கும், சாதி மத, வருமான அளவு பற்றிய வேறுபாடுகளின்றி இந்தச் சலுகை கிடைக்கும் என்று ஆந்திர மாநில முதன் மந்திரி கோபால ரெட்டி சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

1952 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்ட ஊழியர் 'பிராவிடன்ட்நிதி'த் திட்டமானது முக்கியமான ஆறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ள 15,40,000 தொழிலாளர்களைக் கொண்ட 1,950 தொழிற்சாலைகளுக்கு அமுலாகி வருகிறது.

பெரியாறு தண்ணீர் விலையாகிறது!

மின்சார உற்பத்தி ஏற்பாட்டால் வேறு தண்டச் செலவு!

தமிழகப் பணம் பாழாகும் விந்தை

தமிழர்களே பெரும் எண்ணிக்கையினராக வாழ்வதும், மதுரை மாவட்டத்தைத் தொடர்ந்தாற்போல் தொட்டுக்கொண்டு உள்ளதுமான பீர்மேடு மலைப் பகுதி சென்னைத் தமிழகத்துடன் இணைக்கப்படாது, திரு-கோச்சியுடன் இணைக்கப்பட்டுள்ள காரணத்தால், அப்பகுதியில் உற்பத்தியாகும் பெரியாறு தண்ணீரை, பாசனத்திற்காக, ஆண்டு ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்து விலைக்கு வாங்கி வருகிறது தமிழகம்—இல்லை—சென்னை அரசாங்கம்.

ஏற்கனவே பெற்றுவரும் நீர் அளவுடன் மேலும் கூடுதலாக தண்ணீர் பெற்று, அதைக் கொண்டு மின்சார உற்பத்திச் செய்யும் திட்டத்திற்கு, இப்பொழுது வேறு பெருந்தொகையைக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் சென்னை அரசாங்கம் இருக்கிறது.

"திரு - கொச்சிக்கும் - சென்னைக்கும் நீண்ட காலமாகத் தகராறில் இருந்துவந்த பெரியாறு மின்சார உற்பத்தி ஏற்பாட்டில் உடன்பாடு ஏற்பட்டு இருக்கிறது. அதன்படி 35 கோடி யூனிட் வரையில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு 8760 யூனிட் மின்சாரத்திற்கும் ரூ. 12 விதமும், அதற்கு மேற்பட்ட மின்சார உற்பத்திக்கு ஒவ்வொரு கிலோவாட் (8760) யூனிட்டுக்கும் ரூ. 18 விதமும் உரிமைக் கட்டணமாக சென்னை அரசாங்கம் திரு - கொச்சி அரசாங்கத்திற்குத் தரவேண்டும்."

இத்தகவலை டெல்லி மேல்சபையில் பாசன மின்சார உற்பத்தி துணை மந்திரி ஜெயசுக்லால் அதாய், எஸ். வி. ராமசாமி அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் கூறி இருக்கிறார்.

பீர்மேடு—தமிழகத்துடன் இணைக்கப்படுமானால், பாசனத்திற்காகவும் மின்சார உற்பத்திக்காகவும், பெரியாறு நீரைப் பயன்படுத்திக் கொள்வதில், திரு—கொச்சிக்கு கொட்டிஅழும் பெருந்தொகை சென்னை அரசாங்கத்திற்கு மிச்சமாகும். அப்பெருந் தொகையை தமிழ் மக்களின் தொழில் முன்னேற்றத்திற்காக, தாராளமாகச் செலவிடலாம், சென்னை அரசாங்கம். இத்தகு தண்டச் செலவு பெரிதாகத் தெரியவில்லை கனம் காமராசருக்கு! என்ன ஆபத்து வந்துவிட்டது தமிழ் நாட்டிற்கு என்று வாய்மதம் கொண்டு கூவுகிறார், அந்தக் கனம்!

திரு - கொச்சியில் மீண்டும் பட்டம் ஆட்சியா?

பட்டத்தின் பதவி மோகம் வெறியாகிறது!

தி. த. நா. காங்கிரஸ் உறுப்பினர் போக்கில் பனம்பள்ளி குழப்பம்!

ஆட்சியைக் கைப்பற்ற பொதுவுடமைக் கட்சியின் தீவிரம்!

(நமது அரசியல் நிருபர்)

புதுடில்லி, மார்ச் 13— திரு—கொச்சியின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ் அமைச்சரவை, சட்டசபை கட்சியிலிருந்து ஆறு உறுப்பினர்கள் விலகிக்கொண்டதால், பதவியைவிட்டு வெளியேற வேண்டியதாகிவிட்டது. போதிய எண்ணிக்கை பலம் இல்லாத நிலையில், எந்த வகையிலாவது எவருடைய ஆதரவாவது கிடைக்கக்கூடும் என்ற நம்பிக்கையில் பதவியில் இருப்பது 'ஒழுக்கக்கேடாகும் எனக் கூறிவிட்டு, காங்கிரஸ் முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்தமேனன், தனது ஆட்சிப் பொறுப்பை இராஜிநாமா செய்துவிட்டார். இராஜிநாமா செய்ததுடன், புதிய மந்திரி சபையை அமைத்து ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கக்கூடிய சாத்திய கூறுகளை ஆராயும்படியும் பனம்பள்ளி, ராஜப்பிரமுகரிடம் கோரியுள்ளார்.

பனம்பள்ளியின் இறுதிக் கோரிக்கை, காங்கிரஸ் கட்சியின் நோக்கம் பற்றிய பலவிதமான கற்பனைகளுக்கு இடமளிக்கிறது.

காங்கிரஸ் மந்திரி சபை அமைக்கப்படுவதற்கு முன், பட்டம் தாணுப் பிள்ளையின் பி. சோ. கட்சியை அரியாசனத்து அமர்த்தி ஆதரவு காட்டி வந்தது போன்றே, இப்பொழுதும், அக்கட்சியிடம் பதவியை ஒப்படைக்கச் சொல்லி தாம் ஆதரவு காட்டி வருவது என்ற உறுதியான எண்ணத்துடன் தான், விலகும் பனம்பள்ளி அவ்வாறு கோரியிருக்க வேண்டும் என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறது. அதே நேரத்தில், ஆட்சிப் பொறுப்பில் பட்டம் தாணுவை அமர்த்தி ஆதரவு காட்டுவதற்கு தனது குழுபல் முன்வந்தாலும், காங்கிரஸ் கட்சியுடன் இணைந்துள்ள தி. த. நா. காங்கிரசைச் சேர்ந்த 12 சட்டசபை உறுப்பினர்கள், அவ்வேற்பாட்டிற்கு இணங்குவார்களா என்பதில் பனம்பள்ளிக்கு பலமான குழப்பம் இருக்கிறது.

காங்கிரஸ் மேலிடத்தைக் கொண்டு, பட்டம் மந்திரி சபையை ஆதரிக்கும்படி, தி. த. நா. காங்கிரஸ் உறுப்பினர்களையும் வற்புறுத்தி ஒப்புக்கொள்ளச் செய்யலாம் என்ற துணிவும் பனம்பள்ளிக்கு இருப்பதாகவும் நம்பப்படுகிறது.

த. நா. காங்கிரஸ் உறுப்பினர்களுக்குத் திருப்தி ஏற்படும் வகையில், பட்டத்தைக் கொண்டே ஏதாவது வாக்களிக்கச் சொல்லி, அவர்களுடைய ஆதரவுடன் பட்டத்தை ஆட்சியில் உட்காரவைத்துவிடலாம் என்றும் பனம்பள்ளி திட்டமிட்டு இருப்பதாகவும் தெரியவருகிறது.

தற்காலிகமாக பட்டத்தைப் பதவியிலேற்றிய போதிலும், முன்னர் செய்ததுபோல், மறுபடியும் தக்கத்தருணம் பார்த்து அவர் மந்திரி சபையைக் கவிழ்த்துவிடலாம் என்ற நம்பிக்கையூட்டி, த. நா. காங்கிரஸ் உறுப்பினர்களை பட்டத்தை ஆதரிக்குமாறு, பனம்பள்ளி கோரக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகு நடவடிக்கையின் மூலந்தான், அடுத்தத் தேர்தலில் பட்டத்தின் கட்சியை முறியடித்து, காங்கிரசே வெற்றி பெறுவது சாத்தியமாகும் என எடுத்துக் காட்டி, காங்கிரசின் ஐக்கியத்திற்காக—நிலையான வெற்றிக்காக, தாங்களும் ஒத்துழைக்க வேண்டுமென த. நா. காங்கிரஸ் உறுப்பினர்களை, பட்டத்தை ஆதரிக்கும் ஏற்பாட்டை வெற்றிகரமாக ஒப்புக்கொள்ளச் செய்ய, காங்கிரஸ் மேலிடத்தால் முடியக்கூடும் என்று பனம்பள்ளி நம்புவதாகவும் தெரிகிறது.

மக்கள் சோஷலிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழுவை, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்குத் தனக்கு உரிமை அளிக்கும்படி எப்படியும் பட்டம் செய்து வருவார் என்ற நம்பிக்கை இங்கு பலமாக இருக்கிறது. இல்லையானால் திரு-கொச்சியின் கம்யூனிஸ்டு கட்சியின் கை பலத்துவிடும், அதன் பிறகு இந்தியாவிற்கே அது பெரிய போராபத்தாக முடிந்துவிடும் எனக் காரணங் காட்டி, ம. சோ. தேசிய செயற்குழுவை தனது விருப்பத்திற்கு இணங்கும்படிச் செய்ய பட்டம் தாணுவுக்குப் போதிய ஆற்றல் உண்டு எனவும் இங்குள்ள காங்கிரஸ் வட்டாரம் நம்புகிறது.

பட்டம்தாணு மந்திரி சபை அமைப்பதற்கு ஆதரவு தர கம்யூனிஸ்டு கட்சியினர் முன்வந்து இருப்பதாகவும் நம்பப்படுகிறது. இதை, ஆதாரமாகக் காட்டியே காங்கிரஸ் கட்சியினர் ஆதரவுடன் 'பட்டம்' மந்திரி சபை அமைப்பது முக்காலும் நிச்சயமாகும் என்று எண்ணப்படுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சட்டசபையில் உள்ள கட்சித் தலைவர்கள் அனைவரையும் கலந்து, ஒரு சர்வகட்சி மந்திரி சபையை அமைக்க தி. கொ. ராஜப்பிரமுகரைக் கேட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இந்த வேண்டுகோளை, செயலாற்றப்படுவதில் உள்ள சங்கடத்தைக் கருதி, ராஜப் பிரமுகர் ஏற்றுக் கொள்ளமாட்டார் என்றும் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் நம்புகின்றனர்.

எப்படியும் பட்டம் மீண்டும் திரு—கொ. ஆட்சிப் பொறுப்பில், காங்கிரஸ் கட்சியின் பக்கத் துணையுடன் அமரக்கூடும் என்று உறுதியாக எண்ணப்படுகிறது.

ஏதாவது சிறு தவறின் காரணமாக, இந்த ஏற்பாடு முறிந்துபோனால்தான், குடி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 14—3—'56 புதன்

மற்றொரு வீழ்ச்சி

மொழிவழியில் மாகாணங்களைத் திருத்தி அமைப்பதினால் நாட்டு ஒற்றுமைக்குக் கேடு ஏற்படக்கூடுமென்று காங்கிரஸ் மேலிடம் கூறத் தொடங்கியது. அதன் எதிரொலியாக மாகாணங்களைத் திருத்தி அமைப்பதில் மொழியை முக்கியமாகக்கொள்ள முடியாது எனவும் காங்கிரஸ் மேலிடம் தீர்மானித்தது.

அக்கருத்தை உள்ளடக்கமாகக்கொண்ட ஒரு தீர்மானம் அமிர்தசரஸ் காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. உசிதமான இடங்களில் மொழியை அடிப்படையாகக் கொண்டும், உசிதமற்ற இடங்களில் மொழியை முக்கியமாகக் கொள்ளாதும் மாகாணங்கள் திருத்தி அமைக்கப்படும் என்பது அமிர்தசரஸ் தீர்மானத்தின் சாரமாகும்.

மொழியை அடிப்படையாகக் கொள்வதற்குரிய உசிதமான இடம் எது, உசிதமற்ற இடம் எது என்பதில் இறுதியாக முடிவெடுக்கும் உரிமை காங்கிரஸ் மேலிடத்திற்கே உண்டு. உசிதமானது, உசிதமற்றது என்பதைக் கண்டறிவதற்குரிய திட்டவட்டமான மதிப்பீடு வகைகளை காங்கிரஸ் மேலிடம் வரையறுத்துக் கூறவில்லை. எனவே, தம் மனம் போனப் போக்கில் நடந்துகொண்டு அதுதான் உசிதமானது என்று காங்கிரஸ் மேலிடம் கூறத் துணியும்பட்சத்தில், அதை உசிதமற்றது என்று மறுத்துக் கூறுவதற்குத் தக்க நியாயம் எவருக்கும் இருக்க முடியாது.

ஏதாவது குறிப்பிட்ட ஒரு மாகாண அமைப்பு விஷயத்தில் காங்கிரஸ் மேலிடத்தின் விருப்பம் எதுவோ, அதுதான் அம்மாகாண அமைப்புக்கு உசிதமானது என்று மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு, அதற்கு மாறாக முடிவு கட்டப்பட்டுள்ள மற்றொரு மாகாண அமைப்பு ஏற்பாட்டை, எவரும் உசிதமற்ற ஏற்பாடு எனக் குறை கூறக்கூடாது. அப்படி கூறப்படுமானாலும், அதிலுள்ள நியாயா நியாயத்தை ஒப்புக்கொள்ளாததுடன், அவ்வாறு குற்றங்கூறுகிறவர்களையும் குறுகிய புத்தியினர் என்று காங்கிரஸ் மேலிடம் தூற்றவும் முன்வரும். அத்தூற்றலையும், அதன் போக்கில் குறைகாணுகிறவர்கள் தாங்கிக்கொண்டு காங்கிரஸ் மேலிடத்திற்கு ஒத்தூத முன்வர வேண்டுமே ஒழிய, அதற்கு மேலும் முணுமுணுத்துக்கொண்டு இருக்கக் கூடாது. அதன் பிறகு அப்படி யாராவது முணுமுணுத்துக் கொண்டு இருந்தால், அவர்கள் அனைவரையும் காங்கிரஸ் மேலிடம் தேசத் துரோகிகள் என்று சாடி சாபம் கொடுத்துவிடும்.

உயர்ந்த இந்தியக் கலாச்சாரமும் மேல்நாட்டு ஜனநாயகப் பண்பும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ள ஒரு கூட்டு ஜனநாயக பண்டம் இதுவாகும். இதன் சிருஷ்டிகர்த்தா இந்தியப் பிரதமர் உள்ளிட்ட காங்கிரஸ் மேலிடமாகும்!

மொழியை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மக்களே பெரும் எண்ணிக்கையினராக வாழ்ந்துவரும் தேவிகுளம், பீர்மேடு போன்ற, சென்னையை ஒட்டியுள்ள தமிழ்ப் பகுதிகளை சென்னையுடன் இணைப்பதைக் காங்கிரஸ் மேலிடம் உசிதமெனக்கொள்ளவில்லை. ஆனால், அதே காங்கிரஸ் மேலிடம், ஆந்திர மொழியினர் வாழும் தெலிங்கானா பகுதியை, ஆந்திர மாகாணத்துடன் இணைத்துப் போடுவதை உசிதமெனக் கருதுகிறது; அதைச் செயலாற்றியும் முடித்துவிட்டது.

திரு — கொச்சியில் இணைக்கப்பட்டு இருக்கின்ற தமிழ்ப் பகுதிகள் சென்னையுடன் இணைவது உசிதமற்றது எனக் காங்கிரஸ் மேலிடம் முடிவு கட்டுவதற்குப் பொருத்தமான காரணங்கள் யாவை?

ஆந்திர மாகாணத்துடன் தெலிங்கானாவை இணைப்பது உசிதமானது எனக் காங்கிரஸ் மேலிடம் முடிவுகட்டியதற்குப் பொருத்தமான நியாயங்கள் யாவை?

இரண்டுக்கும், காங்கிரஸ் மேலிடம்கூட மறுக்க முடியாதத்தன்மையில், மொழிதான் பொருத்தமான காரணமாக இருக்கிறது. எனவே, இரண்டின் முடிவும் ஒரேமாதிரியாக இருக்கவேண்டியதுதான் முறையாகும் என்று நம் போன்ற சாமானியர்களுக்கும் படக்கூடும். ஆனால் காங்கிரஸ் மேலிடத்திற்கோ, ஆந்திரர்கள் வகையில் பொருத்தமாகப்படுவது தமிழ் மக்கள் வகையில் பொருத்தமற்றதாகப்படுகிறது!

ஆந்திரர்கள் விஷயத்திலும், தமிழ் மக்கள் விஷயத்திலும் தங்களால் மேற்கொள்ளப்பட்ட முடிவில், நீதியும் அநீதியும் கலந்துறவாடக் காரணம் என்ன என்பதற்குத் தக்கதோர் விளக்கத்தைக் கூறும் பொறுப்பு காங்கிரஸ் மேலிடத்திற்கு உண்டு. ஜனநாயகத்திற்கு நாம் தெரிந்துகொண்டிருக்கும் பொருள் காங்கிரஸ் மேலிடத்திற்கும் உடன்பாடு உடையதானால், அது, நமக்கல்ல—நாட்டு மக்களுக்கு விளக்கம் கூறியாக வேண்டும். அதற்குரிய விளக்கத்தை அது தடுக்கக்கூடும் என நம்பும் வகையில், அதன் முன்னாள் போக்கு இருக்கவில்லை.

மாகாணங்களைத் திருத்தி அமைப்பதில், மொழியை முதன்மையாகக்கொண்டு நீதி வழங்க மறுத்துவிட்ட காங்கிரஸ் மேலிடம், அதே மொழியை அடிப்படையாகக் கொண்டு ஆந்திரர்களுக்கு நீதி வழங்க முன்வந்ததுடன் நின்றுவிடாமல், இப்பொழுது சீக்கியர்களுக்கும் மொழி வழியில் நீதி வழங்க முன்வந்து இருக்கிறது. அதுவுமன்றி, மாகாணங்களைத் திருத்தி அமைப்பதில் மற்ற மாகாண விஷயங்களில் காங்கிரஸ் நீங்கிய எதிர்க் கட்சியினரைக் கலந்துகொண்டு முடிவுகட்டவேண்டும் எனக் கனவிலும் கருகாத காங்கிரஸ் மேலிடம், அகாலியர் விஷயத்தில் பரிபூரண சரணாகதியே அடைந்திருக்கிறது.

மற்ற மாகாணங்களின் முடிவுகளை ஒரே நேரத்தில் அறிவிப்பதற்குத் துணிவு இருந்த காங்கிரஸ் மேலிடத்திற்கு, ஆந்திரருக்கு உரித்தான முடிவையும், அகாலி சீக்கியருக்கு உரித்தான முடிவையும் கூறத் துணிவில்லாமல் போய்விட்டது. ஆந்திரத் தலைவர்களைத் திருப்தி செய்வதிலும், காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தில்லாத அகாலி சீக்கியத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதிலும் காங்கிரஸ் மேலிடம் ஏறத்தாழ மூன்று திங்களை செலவழித்து இருக்கிறது.

அகாலியர்களின் ஒப்புதலைப் பெறவும், ஆந்திரர்களின் சம்மதத்தைப் பெறவும் அரும்பாடு பட்ட காங்கிரஸ் மேலிடம், தமிழ் மக்களின் கோரிக்கையை அலட்சியம் செய்திடக் காரணம் என்ன? சிந்திக்க வேண்டிய கருத்துள்ள கேள்வியாகும் இது.

காமராசர் போன்ற கனங்கள் தமிழர்களின் தலைவர்களாக வேடந் தாங்கி நடித்து வருகின்றபொழுது, காங்கிரஸ் மேலிடம், தமிழ் மக்களை என் மதித்து நடந்து கொள்ளப் போகிறது? காங்கிரஸ் மேலிடம் 'போடு' என்றதும், 'எண்ணிக் கொள்' என்று செயல் மூலம் பதில் கூறும், இச்சகம் பேசுவோர் அளித்துள்ள 'பச்சைத் தமிழன்' என்ற பட்டத்தைத் தாங்கிக் கிடக்கும் கனம காமராசர்கள் அல்லவா இங்கு நடமாடிக்கிடக்கிறார்கள்! அவர்கள் உள்ளவரையில் அவர்களை அரசியலில் நடமாட தமிழ் மக்கள் அனுமதித்துக் கொண்டு இருக்கிறவரையில் காங்கிரஸ் மேலிடம் தமிழ் மக்களை இலட்சியம் செய்து நடந்து கொள்ளவா போகிறது? ஒருக்காலுமில்லை!

காங்கிரஸ் மேலிடத்தார் புரிந்துகொள்ளும் மொழி ஒன்றே ஒன்றுதான். காங்கிரஸ் மேலிடத்தைப் புரிந்து கொள்ளச் செய்யக்கூடிய மொழி கற்றவர்களாக ஆந்திரத் தலைவர்களும், அகாலியத் தலைவர்களும் இன்று உள்ளனர்.

அகாலியத் தலைவர்களிடம் காங்கிரஸ் மேலிடம் அடைந்துள்ள சரணாகதி, அதனுடைய மற்றொரு வீழ்ச்சியையே குறிக்கிறது.

ஆறு எதிரிகளைத் தோற்கடித்தஒருபெண்

பிஜப்பூர் நகர சபைத் தேர்தலில் சம்பவம்

ஆறு ஆண்கள் போட்டியிட்டனர்; ஒரு பெண்ணும் போட்டியிட்டார். நகரசபைத் தேர்தலில் பொதுத் தொகுதி அது. போட்டியிட்ட ஆறு ஆண்களையும் தோற்கடித்துவிட்டு, அந்தப் பெண் வெற்றி பெற்றிருக்கிறார்.

826 வாக்குகள் அவருக்குக் கிடைத்தது; அவருக்கு அடுத்தவருக்குக் கிடைத்த வாக்குகள் 773 மட்டுமே.

வாக்குப் பதிவின்போது தாக்கப்பட்ட ஒரு பெண்மணியான துங்கவ்வா தம்பொலி என்ற அம்மையார், பெண்களுக்கான தனித் தொகுதியில் வெற்றி பெற்றிருக்கின்றனர்.

இப்படி சில ருசிகர சம்பவங்களுடன் கடந்த 8-ந் தேதியன்று நகரசபைத் தேர்தல் நடைபெற்று முடிவுற்றிருக்கிறது.

'பெண்களுக்குச் சம உரிமைகள்வேண்டும்'

குஜராத்தியமாதர் கோரிக்கை நாள் கொண்டாடுகின்றனர்

அகமதாபாத், மார்ச் 11—

'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே' என்று பாரதி பாடினார்.

பாட்டிலே புதுமை இருக்கிறது. அது, நாட்டிலே நடைமுறைக்கு வரவேண்டாமா? கேட்டிருக்கின்றனர் குஜராத்தி, சௌராஷ்டிர, கட்ச் மாதர்கள்!

'பெண்களுக்கும் சம உரிமை கோரும் நாள்' என்று குஜராத், சௌராஷ்டிரப். பகுதிகளில் கோரிக்கை நாள் கொண்டாடுகின்றனர்.

சுமார் 40 பெண்கள் நிறுவனங்கள் கூடி பொதுக்கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தினார்கள் என்று தெரியவருகிறது.

"பெண்கள் சமுதாயத்தில் நிலவும் தற்கொலை முதலியவைகளுக்குக் காரணம், அவர்களுக்குச் சம அந்தஸ்து கிடைக்காததுதான்; அரசியல் சட்டத்தில் பெண்களுக்குத் தரப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகள் தாமதமின்றி நடைமுறைக்கு வரவேண்டும்,"

என்றும், கூட்டங்களில் பேசியவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

பெண்களுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலையைப் போக்க, நாடு முழுவதுமாக பெருங் கிளர்ச்சி துவக்குவதெனவும் அந்தப் பெண்கள் உறுதி பூண்டனராம்!

கல்வியறிவற்றோர் தொகை

உலகிலேயே போர்ச்சுகீசிய கினியாவில் தான் அதிகமாம்

நியூயார்க், மார்ச் 11—

"போர்ச்சுகீசிய கினியாவில் தான் கல்வியறிவற்றோர்தொகை உலகிலேயே மிக அதிகமாக இருக்கிறது,"

என்று, ஐ. நா. வெளியிட்டுள்ள தகவல் கூறுகிறது.

அங்குள்ள மக்களில் 03 சதவிகிதத்தினருக்கு மட்டுமே எழுத அல்லது படிக்கத் தெரியுமாம்!

இந்தியாவில் 82 சதவிகிதத்தினர்; எகிப்தில் 74·5 சதவிகிதத்தினர்: அல்ஜீரியாவில் 94 சதவிகிதத்தினர்; ஆப்பிரிக்காவின் பண்டுக்கள் 70·9 சதவிகிதத்தினர்—கல்வியறிவு இல்லாதவர்கள் என்றும் அந்த விவரங்கள் கூறுகின்றன.

இந்தி மொழியில் சட்ட நூற்கள் வேண்டுமாம்!

பாட்னா, மார்ச் 12—

'இந்தி மொழியில் சட்ட நூற்கள் கிடைக்கும்படி செய்யப்பட்டாலன்றி, இந்தியில் சட்டங்களை வியாக்கியானம் செய்வது இயலாது என்று சாட்சியம் தந்த உயர் நீதிமன்ற நீதிபதிகளில் பெரும்பாலோர் கருத்தறிவித்தனர்,"

என்று, மொழி ஆய்வுக் குழுத் தலைவர் பி. ஜி. கேர் கூறியுள்ளார்.

'மொழிவழி மாகாணமே விவசாயிகள் சுயராஜ்யம்'

விநோபா தரும் கருத்து

கர்நூல், மார்ச் 11—

"அவர்கள் சொந்த மொழியில் அரசாங்க அலுவல்கள் நடைபெற்றால்தான், விவசாயிகளைப் பொறுத்தவரையில் சுயராஜ்யத்திற்கு உண்மையான பொருள் இருக்க முடியும்."

"ஆந்திரர்கள் அறிவாளிகளாகவும், திறமைசாலிகளாகவும் இருப்பதினால், விசால ஆந்திரம் அமைவதில் தெலிங்கானா மக்கள் அஞ்சுகின்றனர். மனிதனிடம் உள்ள ஆற்றலை நன்மைக்கும் தீமைக்கும் பயன்படுத்தக் கூடும் என்பதினாலே அந்தஅச்சம் ஏற்படுகிறது."

களக்காடு குன்றுகளில் நீர் ஊற்றுகள்

'சர்வே' நடத்த சர்க்கார் உத்தரவிடுகிறது

திருநெல்வேலி, மார்ச் 11—

பல தலைமுறைகளுக்கு முன் சுமார் 18,800 ஏகர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி தந்து கொண்டிருந்த நம்பியார் நதியில் நான்கு அணைகள் கட்டப்பட்டிருந்தனவாம். அந்த அணைகள் அமைந்திருந்ததாகக் கூறப்படும் களக்காடு குன்றுகளில் நீர் ஊற்றுகள் பற்றி 'சர்வே' நடத்துமாறு சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

எஞ்சினீயர்கள், அதிகாரிகள், காங்கிரசார், விவசாயிகளடங்கிய ஒரு குழு, வெங்காயக்கள் அணை அருகே ஒரு வாரம் வரை தங்கி விசாரணை நடத்துமாம்.

இந்த விசாரணை நடத்தப்படும் பகுதி பற்றிய 'ஸ்தல புராணம்' அறிந்த சுமார் 100 விவசாயிகள்—நாங்குனேரி தாலுகாவைச் சேர்ந்தவர்கள் விசாரணைக்குத் துணை புரிவராம்.

பல்வேறு மாநிலங்களிலுமுள்ள 27 பயிற்சி நிலையங்களில் சுமார் 367 கிராம சேவகிகள் இப்பொழுது பயிற்சி பெற்று வருகின்றனர்.

சுபாஷ் போஸ் பற்றிய தேவரின் கருத்து

மாநிலங்கள் சபையில் மறுப்பு

புதுடில்லி, மார்ச். 12—

'சுபாஷ் சந்திர போஸ் இன்னும் உயிருடன் இருப்பதாக முத்துராமலிங்கத்தேவர் விடுத்துள்ள அறிக்கை சர்க்கார் கவனத்துக்கு வந்திருக்கிறதா?' என்று மாநிலங்கள் சபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் சர்க்கார் அந்த பத்திரிகை அறிக்கையை கவனித்திருப்பதாகப் பிரதம மந்திரி கூறினார்.

கடந்த சில ஆண்டுகளாக சர்க்கார் சேகரித்துள்ள எல்லா சான்றுகளிலிருந்தும் சுபாஷ் சந்திர போஸ் இறந்திருக்க வேண்டும் என்று நிச்சயமாகத் தெரியவருவதாக அவர் கூறினார். எனவே, சுபாஷ் போஸ் சீனாவிலுள்ள சிக்கியாங் மாகாணத்தில் வாழ்ந்து வருகிறார் என்ற கூற்றுக்கு இடமே இல்லை என்று பிரதம மந்திரி தெரிவிக்கிறார்.

ஆயினும், சுபாஷ் மரணமுற்ற சந்தர்ப்பங்கள் குறித்து ஆராய்ந்தறிவதற்காக குழு ஒன்று இந்திய சர்க்கார் நியமித்திருக்கிறார்கள் என்றும் குழு இதற்காக ஜப்பானுக்குச் சீக்கிரமாகப் புறப்பட்டுச் செல்லும், என்றும் அவர் பதிலிறுத்தாராம்.

நங்கலில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள ரசாயன உரகன திரவ தொழிற்சாலை, ஆண்டு ஒன்றுக்கு 2,00,000 டன் அம்மோனியம் நைட்ரேட்டும், 7 முதல் 8 டன் வரை கனதிரவமும் உற்பத்தி செய்யக்கூடிய சக்தி வாய்ந்ததாக இருக்கும்.

நாகர் தலைவர் மீது அசாம் முதன் மந்திரி பழி?

யுத்தம் தொடுத்திருப்பதாக ஓலம்

ஷில்லாங், மார்ச். 12—

'நாகர் தேசியக் கவுன்சில் தலைவரான பிஜோ, சில மாதங்களுக்கு முன் தலைமறைவானர்; அவர் இப்போது, 'வெளிநாடு'களிலிருந்து ஆயுதங்கள் பெறுவதில் ஈடுபட்டிருக்கிருர்' என்று, நாகர் தலைவர்மீது பழி சுமத்தும் வகையில், அசாம் மாநில முதன் மந்திரி சட்டசபையில் பேசியிருக்கிருர். மேலும் தகவல்களை அவர் தரவில்லை.

'நாகர் குன்றுகளை சுதந்திரம் பெற்று விட்டதாகப் பிரகடனம் செய்வதுடன், ஷில்லாங்கையும் கைப்பற்ற பிஜோ திட்டமிட்டிருக்கிருர்' என்றும் முதன் மந்திரி நாகர் தலைவரைச் சாடினராம்.

பிஜோ சர்க்காருக்கு எதிராக ஒரு யுத்தமே நடத்துவதாகவும் முதன் மந்திரி ஓலமிட்டாராம்.

அமைதி ஏற்பட்டால்தான் சுயாட்சியாம்!

வட ஆப்பிரிக்க மக்களுக்கு சுய ஆட்சி வழங்குவதற்குப் பிரான்ஸ் தயாராக இருக்கிறதாம்!

ஆனல் அல்ஜீரியாவில் சட்டமும் ஒழுங்கும் ஏற்பட்டால்தான் அங்கு சுதந்திரமான — நேர்மையான தேர்தல் நடத்த பிரான்ஸ் ஒப்புமாம்!

புதுவை, காரைக்காலுக்கு முழு விடுதலை

சட்டபூர்வமான அதிகார மாற்றம்

சில வாரங்களில் ஒப்பந்தம் தயாராகும்

புதுவை, காரைக்கால் பகுதிகள் சீக்கிரமே முழு விடுதலை பெற்று விடும் எனத் தெரிகிறது.

நடைமுறையில் விடுதலை வழங்கப்பட்டு விட்டாலும், சட்டபூர்வமான அதிகார மாற்றம் இன்னும் ஏற்படவில்லை. அந்தச் சட்டபூர்வமான அதிகார மாற்றத்திற்கான ஒப்பந்தம் சில வாரங்களில் தயாராகி விடும் என்று டெல்லி வந்துள்ள பிரெஞ்சு வெளிவிவகார மந்திரி பினய் தெரிவித்திருக்கிருர்.

பத்திரிகையாளரிடம் பேசும் போது, 'பிரெஞ்சுக்காரரைப் பின்பற்றி போர்ச்சுகீசியரும் ஏன் கோவாவிலிருந்து வெளியேறி விடக்கூடாது?' என்று அவர் கேட்கப்பட்டதாயும், அதற்கு அவ[illegible] 'பிறிதொரு நாட்டின் கொ[illegible]கைபற்றி நான் எதும் கூற இயலாது' என்றும் தெரிவித்தாராம்.

'தட்சிணப் பிரதேசம்' பற்றி அனுமந்தையா

பற்றுக்குறை வரவு - செலவுத் திட்டம் தாக்கல்

"தட்சிணப் பிரதேசம் அமைப்பது என்ற பேச்சு வார்த்தைகளில் மைசூரும் அடிபட்டது; ஆனல், இது, நாம் அவசரமாக முடிவெடுக்கக் கூடிய ஒரு விஷயம் அல்ல. இந்தியாவின் ஒற்றுமை, சுமுகமான நல்லுறவு என்ற பரந்த விஷயங்களையும் நாம் மனதில் கொள்வதுடன், அதேபோது நிர்வாகத்திறன், பொருளாதார முன்னேற்றம், பரஸ்பரம் நல்லெண்ணம் இவற்றைப் பாதுகாப்பதற்கு வழிவகை காண்பதையும் நாம் மனதில் கொண்டாக வேண்டும்."

என்று, மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா 1956—57ம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தைச் சட்டசபையில் தாக்கல் செய்து பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மைசூரின் திட்டமும் பற்றுக்குறைத் திட்டமாகவே இருக்கிறது.

1956—57-ம் ஆண்டில், வரவு ரூ. 2,577·53 இலட்சமாகவும், செலவு ரூ. 2966.59 இலட்சமாகவும் இருக்கிறது; எனவே, துண்டு விழுவது ரூ. 389 இலட்சமாகவும் இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சுமார் ரூ. 4 கோடி வரை துண்டு விழுகிறது என்ருலும், புதிய வரி விதிப்பு எதும் இல்லை.

அதேபோல, ஆந்திரா, திரு — கொச்சி மாநிலங்களிலும் துண்டு விழும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தாலும், புதிய வரி விதிப்பு எதும் உத்தேசிக்கப்படவில்லை.

துண்டு விழும் தொகையைச் சரிக்கட்ட கடன் எழுப்பவும், மத்திய சர்க்கார் உதவியை நாடவுமே உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

ஆனல், சென்னை மாநிலத்தில் தான், துண்டுவிழும் தொகையில் ஒரு பகுதியைச் சரிக்கட்ட, ஏழை நடுத்தர மக்களைப் பாதிக்கக்கூடிய புது வரி விதிப்புகளைக் கொண்டு வந்திருக்கின்றனர், காங்கிரசார்!

மைசூர் திட்டம் குறித்துக் குறிப்பிடுகையில் அனுமந்தையா, தான் டில்லி சர்க்காரின் உதவியை எதிர்நோக்குவதாயும், மாநில முழுவதிலும் மதுவிலக்கை அமுல் செய்வதற்கு டில்லியின் யோசனையைக் கேட்பதாயும் தெரிவித்திருக்கிருர்.

சிங்கப்பூருக்கு சுதந்திரம்

வாக்கெடுப்பு நடத்த மார்ஷல் ஏற்பாடு

சிங்கப்பூர் சுதந்திரம் பெறுவது பற்றி ஒரு வாக்கெடுப்பு நடத்துவதற்கு வழிசெய்யுமாறு ஐவர் கொண்ட குழு ஒன்றை முதன் மந்திரி டேவிட் மார்ஷலின் தொழிலாளர் முன்னணி நியமித்திருக்கிறது.

இந்த ஐவர் குழுவில், இந்தியர் எவரும் இல்லை. தொழிலாளர் முன்னணி, மக்கள் செயல கட்சி, லிபரல் சோஷலிஸ்டு கட்சி, மலாயா சீன சங்கம், ஐக்கிய மலாயா தேசிய இபக்கம் இவை மட்டுமே இடம் பெற்றிருக்கின்றன.

இந்தியருக்குக் குழுவில் இடமளிக்குமாறு கோரப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில், சிங்கப்பூரில் உள்ள இந்தியர்கள், சிங்கப்பூர் சுதந்திரம் பெறவேண்டுமென்ற இயக்கத்திற்கு தங்களின் முழு ஆதரவு உண்டெனக் கூறியிருக்கின்றனர்.

விசால ஆந்திரமா? மகா ஆந்திரமா?

ஆந்திரமும் — தெலிங்கானவும் இணைந்து அமையும் மாநிலத்திற்கு 'விசால ஆந்திரம்' என்று பெயரிடுவதா, அல்லது 'ஆந்திரம்' என்றே தொடர்ந்து அமைப்பதா? அல்லது, 'ஐதராபாத்' என்று அழைப்பதா?—என்பது குறித்து தெலிங்கான காங்கிரஸ் தலைவர்களுடன் உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிருர்.

'நவ ஆந்திரா' அல்லது, 'மகா ஆந்திரா' என்றே புதிய ஆந்திரம் அழைக்கப்படுவது சாத்தியம் என்றும் கூறப்படுகிறது.

பழவேற்காடில் பொதுச்செயலாளர்

இளைஞர் முற்போக்குக் கழக ஆண்டு விழாவில் இலட்சிய முழக்கம்

9—3—56-ல், இளைஞர் முற்போக்குக் கழக ஆண்டு விழா திரு. தா. வீ. குப்புசாமி தலைமையில் நடைபெற்றது.

மாலை 6½ மணிக்கு, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்று, மாபெரும் ஊர்வலம் கடைவீதி வழியாக வந்து, திரு. வி. க. திடலைச் சேர்ந்தது.

பின்னர், பழவேற்காடு திரு. மெ. தாவுத்மியான் குழுவினரால் சிலம்பாட்டம் நடைபெற்றது.

அடுத்து தலைவர், இளைஞர் முற்போக்குக் கழகத்தின் கொள்கைகளையும் நடைமுறையில் ஆற்றும் பணி பற்றியும் விளக்கிப் பேசினர்.

பின்னர், ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது.

பின்பு, திரு. அ. நடராசன் பழவேற்காடு செழித்துச் சீர் பெறுவதற்கான வழிவகைகளை எடுத்துக் கூறினர்.

பின்னர், பொதுச் செயலாளர் அவர்களுக்கு, கழகத் தலைவர் திரு. சா. இராதாகிருஷ்ணன் அவர்களால் வரவேற்பு, வாழ்த்துரை வாசித்தளிக்கப்பட்டதுடன் பல கழக நண்பர்களால் கைத்தறித் துணிகளும், மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

பின்பு, பெருத்த ஆரவாரத்திற்கிடையே பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பேசியதாவது:—

"பழவேற்காடு என்னும் இவ்வூர் எப்படி வாழ்ந்து வீழ்ந்து வளர ஆரம்பித்திருக்கின்றதோ அதேபோல திராவிடமும் வாழ்ந்து வீழ்ந்து வளர ஆரம்பித்திருக்கின்றது.

"அன்று வெள்ளையனிடம் வேதனைப்பட்டோம்; இன்று காங்கிரஸ் சர்க்காரிடம் எல்லையில்லா அல்லல்களை அனுபவிக்கின்ருேம்.

"தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலும், சட்டசபையிலும், 'தேவிகுளம்—பீர்மேடு தமிழருக்கே' என்று தீர்மானம் நிறைவேற்றி, 1956-ம் ஆண்டு சனவரித் திங்கள் 23-ம் நாள்வரை ஆதரித்துப் பேசி, பிறகு தங்கள் போக்கை மாற்றிக்கொண்ட காங்கிரசார் நிலை நேர்மையானதா? அல்லது டில்லியில் காமராசர் 'கோட்டை' விட்டு வந்தபின், சர்வகட்சிக் கூட்டணி அமைத்து, பிப்ரவரி 20-ல் அர்த்தால் நடத்தியது நேர்மையானதா?

"நாணயமற்ற வகையில், நேர்மையற்ற வழியில் நடந்துகொண்டு, ஆயிரம் தெய்வங்களை வணங்குவதை விட நீதி, நேர்மை, நாணயம், கற்பு ஆகியவற்றிற்கு மதிப்பளித்து, 'அன்பே கடவுள்; அறிவே கடவுள்' என்று எண்ணி வாழ்தல் சாலச் சிறந்தது.

"'கடவுளைத் திட்டுகிறவர்கள்' என்று எங்களைச் சொல்கிருர்களே! எங்களுக்கும், கடவுளுக்கும் எவ்விதத் தகராறும் கிடையாது. விநாயகரை ஒரு பக்கத்தில் பூசை செய்துவிட்டு, பிறகு விநாயகரை அவமதிப்பதுபோல் 'விநாயகர் சுருட்டு' பிடிப்பதுதான் பக்தியா? ஆதலால் 'அறிவே கடவுள்; அன்பே கடவுள்' என்று நினைத்து வாழுங்கள்."

மேலும் அவர் பேசுகையில், எல்லையற்ற அல்லல்கள், இன்னல்கள், எதிர்ப்புகள் எவ்வளவு இருந்தாலும் தொடர்ந்து பணியாற்றுமாறு இளைஞர் முற்போக்குக் கழகத்தினரைக் கேட்டுகொண்டார்.

'நம் நாடு' நிதிக்காக பொதுச் செயலாளரிடம் இளைஞர் முற்போக்குக் கழகத்தின் வாயிலாக ரூ 13—1—6 கொடுக்கப்பட்டது.

அடுத்து தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் இரா. சு. சு. மணி நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

மேலும் நான்கு மாணவருக்கு தண்டனை

திருவனந்தபுரம், மார்ச் 12—

ஆயுர்வேதக் கல்லூரியைச் சேர்ந்த மேலும் நான்கு மாணவர்கள், கல்லூரிப் பணியாளர்கள் அலுவலகம் செல்லாமல் தடுத்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, ரூ 25 அபராதம் கட்டவேண்டும் என்று தண்டனை விதிக்கப்பட்டனர்.

மாணவர்கள் அபராதம் கட்ட மறுத்து 15 நாள் சிறைத் தண்டனையை ஏற்றுக் கொண்டிருக்கிருர்கள் எனத் தெரிகிறது.

இவர்களையும் சேர்த்து கிளர்ச்சி நடத்தியதை ஒட்டி சிறையிலிருக்கும் மாணவர் எண்ணிக்கை 22 - ஆகிறது.

மாணவர்கள் தொடர்ந்து மறியல் செய்து வருகின்றனர் என்றும் செய்திகள் கூறுகின்றன.

கல்லூரி மூடிக் கிடக்கிறது.

4 - இலட்சம் டன் சிமெண்ட் இறக்குமதி

அவசரத் தேவைகளைச் சமாளிக்கவாம்

"இந்தியாவில் ஏற்பட்டுள்ள அவசரத் தேவைகளைச் சமாளிப்பதற்காக உடனடியாக 4 இலட்சம் டன் சிமெண்ட் இறக்குமதி செய்யப்படும்"

என்று, வர்த்தகத் தொழில் இலாகா மந்திரி சபையின் பத்திரிகைக் குறிப்பொன்று கூறுகிறது.

சோவியத் ரஷ்யா, ருமேனியா உள்ளிட்ட நான்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து இந்த சிமெண்ட் இறக்குமதியாகும் என்றும் கூறப்படுகிறது.

மரபு காக்கும் பேச்சே காணேம்

வரவு — செலவுத் திட்டம் அம்பலமானது பற்றி நேரு தரும் தகவல்கள்

வரவு—செலவுத் திட்ட விபரங்கள் வெளியானது குறித்து பிரதமர் நேரு மக்கள் சபையில் மேலும் சில தகவல்களைத் தந்திருக்கிருர்.

'ராஷ்டிரபதி பவனி'ல் உள்ள சர்க்கார் அச்சகத்தில் வரவு - செலவுத் திட்டம் அச்சடிக்கத் தரப்பட்டபோது விபரங்கள் களவாடப்பட்டதாக நேரு தெரிவித்திருக்கிருர்.

அச்சடிக்கத் தரப்பட்ட அசல் பிரதிகள் சிலருக்கு விநியோகிக்கப்பட்டதாயும், அந்த சிலர் இந்த விபரங்களை, வேறு சிலருக்கு அனுப்பி காசாக்கிக் கொண்டதாயும், அந்தச் சிலரில் இருவர் கைது செய்யப்பட்டிருப்பதாயும் தகவலை வெளிப்படுத்திய ஒருவரும் கைதாகியிருப்பதாயும் அவர் கூறியிருக்கிருர்.

வேறு எவரேனும் இதில் சம்மந்தப்பட்டிருக்கிருர்களா என்பதும் ஆராய்ச்சியிலிருப்பதாகவும் பிரதம மந்திரி தெரிவித்திருக்கிருர்.

கைதாகியுள்ள மூவர்மீதும் உடனடியாக வழக்குத் தொடரப்படும் என்றும் அவர் கூறியிருக்கிருர்.

வரவு - செலவுத் திட்ட விபரங்கள் வெளியாவது போன்ற பெரும் தவறுகள் நேரும்போது, பொறுப்புடையவர்கள் பதவிகளைத் துறப்பது ஜனநாயக மரபு. அந்த மரபு காக்கும் பேச்சே பண்டிதரின் பதிலில் காணேம்!

இராணுவ அதிகாரி நிர்வாணமாகச் சோதனை போடப்பட்டாராம்!

பாரசீக அதிகாரிகள் மீது மாஸ்கோ குற்றச்சாட்டு

தெஹ்ராளிலுள்ள ரஷ்யத் தூதுவராலய முன்னுள் உதவி இராணுவ அதிகாரியான மேஜர் அனதோலி குஜனெட்ஜாவ், வேவு பார்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு 'பாரசீக அதிகாரிகளால் கடந்த பிப். 29-ல் கைது செய்யப்பட்டபோது நிர்வாணமாக்கப்பட்டு சோதனை போடப்பட்டதாக மாஸ்கோ வானெலி தெரிவித்திருக்கிறது.

"பாரசீக அதிகாரிகள் போலி தஸ்தாவேஜு ஒன்றைக்காட்டி, ரஷ்ய அதிகாரி மீது பழி சுமத்த நினைக்கின்றனர்,"

என்றும், மாஸ்கோ வானெலி கூறியிருக்கிறது.

பாகிஸ்தான் குடியரசு

பிரகடன விழாவிற்கு இந்தியப் பிரதிநிதி

மார்ச் 23.ந் தேதியன்று, பாகிஸ்தான் ஒரு இஸ்லாமியக் குடியரசாக மலரப்போகிறதல்லவா?

அந்தக் குடியரசு பிரகடன விழாவின்போது, இந்தியாவின் பிரதியாக, வடமேற்கு எல்லை மாநிலத்தைச் சேர்ந்தவரும், இந்திய அகதி மந்திரியுமான மேகர் சந்த் கன்னு கலந்து கொள்வார் என்று தெரியவருகிறது.

சிறிய கைத்தொழில்கள் அபிவிருத்தி

ரூ. 64 கோடி ஒதுக்கப்படுமாம்!

சிறு கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு இந்திய சர்க்காரும், திட்டக் குழுவும் ரூ. 64 கோடி ஒதுக்கச் சம்மதித்துள்ளனராம்.

புடவைகள், கதர் துணி உற்பத்தி ஆகியவை சிறு கைத்தொழில்கள் என்பதில் சேராதென்றும், முழுப் பணமும் சிறிய சாமான்கள் தயாரிப்பு, சிறிய இயந்திரங்களை இயக்குவது ஆகியவைகளுக்காக மட்டுமே செலவிடப்படுமென்றும் கூறப்பட்டுள்ளது.

இதுவரையில் 11 மாநிலங்களில் 22 'கோ சதனங்கள்' அமைக்கப்பட்டிருக்கின்றன; அவைகளில் 5,000 கால் நடைகள் உள்ளன,

தட்சிணப்பிரதேசம் :

ஆச்சாரியார், அவரின் ஆழ்வார்' கக்கன் ஆகியோர் கருத்துக்கள்

புராண இதிகாச ஆராய்ச்சியிலீடுபட்டிருக்கும் அன்பர் ஆச்சாரியார், அவரது ஆழ்வாரான கனம் சுப்பிரமணியம், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவரான கக்கன் ஆகியோர் தட்சிணப் பிரதேசம் பற்றி தெரிவித்துள்ள கருத்துக்களைச் சுருக்கித் தந்திருக்கிறோம் கீழே:—

கக்கன்

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கக்கன் தட்சிணப் பிரதேச அமைப்பைத் தான் விரும்பவில்லை என்று பொருள் தெரியும்படியாக திருச்சியில் கருத்தறிவித்திருக்கிறார்.

தமிழ் நாடும் கேரளமும் இணைந்த தட்சிணப் பிரதேசம் வேண்டும் என்று மந்திரி சுப்பிரமணியம் பேசிவருவதைக் குறிப்பிட்டுக் கேட்டபோது காங்கிரஸ் தலைவர் கக்கன், 'இந்த யோசனை தொடர்புடைய மக்களிடமிருந்து பிறக்கவேண்டும்' என்று கூறியதாகத் தெரிகிறது.

"ஜனநாயக நாட்டில், எப்போதும் மக்களின் கருத்து சரியாகத்தான் இருக்குமென்பதில்லை, தலைவர்கள்தான் மக்களுக்கு சரியான வழி காட்டவேண்டும்"

என்று, சுப்பிரமணியம் கூறியதைக் குறித்துக் கேட்டபோது கக்கன்,

'மக்களுக்கு, தங்களுக்கு என்ன வேண்டும் என்பதே தெரியாது என்று நாம் எண்ணிக்கொள்வது சரியல்ல'

என்று, பதில் தந்திருக்கிறார்.

'மந்திரிகளிடையே இந்த முக்கியமான விவகாரத்தில் கருத்து வேறுபாடு இருப்பதால், தமிழ் நாடு காங்கிரஸ் தன் நிலையைத் தெளிவாக விளக்குமா' என்று கேட்டபோது, கக்கன், 'இம்மாதிரி சூழ்நிலையில் மௌனம் சாதிப்பதே ஒருவர் செய்யக்கூடிய நல்ல காரியம்' என்று, பதிலிறுத்தாராம்!

நிதி அமைச்சர் சுப்பிரமணியம்

"'தட்சிணப் பிரதேசத் திட்டத்தை சென்னை மக்கள் மீது, டில்லி சர்க்காரோ, பிரதமர் நேருவோ வலுக்கட்டாயமாகத் திணிக்கிற விவகாரமே இல்லை. மக்களின் கருத்துப்படிதான் நாம் நடந்துகொள்ளுவோம். கேள்வி எல்லாம், எது மக்கள் கருத்து என்பதுதான்? என்னைப் பொறுத்த மட்டில், நான், இந்தச் சட்ட சபை தெரிவிக்கும் கருத்தை மக்களின் கருத்தாக ஏற்றுக்கொள்வேன்"

என்று, சென்னை சட்ட சபையில் நேற்று கேள்வி நேரத்தின்போது நிதியமைச்சர் கனம் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறாராம்.

'தட்சிணப் பிரதேசம் குறித்து மந்திரி சபையில் ஒரே கருத்துத்தான் நிலவுகிறதா' என்று கேட்கப்பட்டபோது, 'இதுபோன்ற முக்கியமான விவகாரங்களில், மந்திரிகளிடையே கருத்து வேறுபாடு இருக்கத்தான் செய்யும்; ஆனால், அது மந்திரி சபையில் பிளவு இருப்பதாகச் சொல்வதற்கு உதவாது' என்று பதில் தந்தாராம் கனம் அமைச்சர்.

'தட்சிணப் பிரதேசம் பற்றி, சர்க்கார் தங்கள் கருத்தை விளக்கி, தெளிவான அறிக்கை தருவார்களா?' என்று கேட்கப்பட்டபோது, இது கேள்வி நேரம், அறிக்கை தரும் நேரமல்ல, என்று கூறி மழுப்பியிருக்கிறார் மந்திரி.

'தகுந்த நேரத்தில் சர்க்கார் தனது கருத்தை அறிவிக்கும்' என்றும் கூறினாராம்.

அன்பர் ஆச்சாரியார்

அரசியலிலிருந்து ஓய்வு பெற்றிருக்கும் அன்பர் ஆச்சாரியார், புராண இதிகாச ஆராய்ச்சியிலீடுபட்டிருக்கிறார் என்றாலும், அவ்வப்போது, அரசியல் விவகாரங்களைப் பேசாமலிருப்பதில்லை. அந்த வகையில் மயிலையம்பதியில் தமது அன்பர் பலர் முன்னிலையில் தட்சிணப் பிரதேசம் தேவை என்று பேசியிருக்கிறார். அமிர்தசரஸ் காங்கிரஸ் தீர்மானப்படி பெரும் மாநிலங்கள் அமைவது அவசியம் என்று விளம்பியிருக்கிறார்.

"காமராசரும், அவரது சக மந்திரிகளும் மக்களுக்கு இந்த நேரத்தில் தகுந்த வழிகாட்ட வேண்டும். மந்திரிசபையினர் பெரிய மாநில (தட்சிண பிரதேச) அமைப்பை ஏற்றுக் கொள்வார்களானால், மக்களும் அதற்கு ஆதரவு தருவார்கள் என்று நம்புகிறேன்,"

என்றும் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

தனது சிஷ்யரான சுப்ரமணியம் தட்சிணப் பிரதேசத் திட்டத்தை ஆதரித்துப் பகிரங்கமாகப் பேசிவருவதை, அன்பர் ஆச்சாரியார் பாராட்டியிருக்கிறார். சுப்ரமணியம் துள்ளுவதற்கு ஆச்சாரியாரின் கைப்பிரம்புதான் காரணம் என்பதை அவரது பாராட்டு தெள்ளத் தெளிவாக விளக்குவதாயில்லையா?

இன்னும் ஏதேதோ, 'காரணங்களை'க் காட்டி, பெரிய மாநில அமைப்பு வேண்டும் என்றாராம் இந்தப் பெரிய மனிதர்!

மக்களின் மனநிலையை—எண்ணத்தை அறிந்துகொண்டிருந்தும், அறியாதவர்போலப் பேசினாராம்!

கழகக் கூட்டம்

☆

ஆலங்குடி

பெருமாள் கோவில் திடலில்

15—3—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: என். எஸ். இளங்கோ

பேசுவோர்:

அண்ணா

அ. பொன்னம்பலனார்

தி. மு. கழக உறுப்பினர் வரவு

பொதுக் கூட்டம்

☆

சைதாப்பேட்டை தர்மராஜா கோயில் தெருவில்

15—3—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: இளம்பரிதி

பேசுவோர்:

என். வி. நடராசன்

கண்ணதாசன்

சீக்கியருக்கு எதிராக இந்துக்கள் கொக்கரிப்பு

பஞ்சாபில் அர்த்தால்!

பஞ்சாப் சீரமைப்புக் குறித்து டில்லியின் திட்டத்தை எதிர்க்க அர்த்தால் மேற்கொள்ளுமாறு மகா பஞ்சாப் சமிதி கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்துக்களின் எல்லா கடைகளும், சந்தைகளும் மூடப்பட்டனவாம். முக்கிய நகரங்கள் பலவற்றில் அர்த்தால் மேற்கொள்ளப்பட்டதாகச் செய்திகள் மூலம் தெரிய வருகிறது.

லூதியானாவில் மகா பஞ்சாப் ஆதரவாளர்கள் ஊர்வலங்கள் வந்து; மண்டல சபைகள் எதிர்ப்பு முழக்கங்களை ஒலித்தனராம்.

திருச்சி நகர தி. மு. கழக ஆண்டு விழா சிறப்புக் கூட்டம்

18—3—56 ஞாயிறு காலை 9 மணிக்கு திருச்சி தேவர் மன்றத்தில் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில், தோழர்கள் மு. கருணாநிதி, கண்ணதாசன் பேசுவர்.

இசைமுரசு நாகூர் அனீபா குழுவினருடன் இன்னிசை வழங்குவார்.

நன்கோடை அண்ணா 4

மாலை 6 மணிக்கு டவுன் ஹாலில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

மாநில புது அமைப்பு மசோதா

மாநில புது அமைப்பு மசோதா இந்த வார இறுதிக்குள் பல மாநிலங்களுக்கும் அனுப்பப் பட்டுவிடும் என்று நம்பகமாகத் தெரியவருகிறது.

ஜெயப்பிரகாஷ் - நேரு சந்திப்பு

புதுடில்லி, மார்ச் 13—

இந்தியப் பிரதமர் நேருவை, ஜெயப்பிரகாஷ் நாராயணன் நேற்று மாலை சந்தித்து, அவருடன் இந்திய அரசியல் நிலைகுறித்து விவாதித்ததாயும், தொடர்ந்து இன்றும் சந்தித்துப் பேசுவார் என்றும் தெரியவருகிறது.

தம்மம்பட்டி துப்பாக்கிப்பிரயோகம்

நிதி மந்திரி சுப்பிரமணியம் தரும் திமிரான பதில்

சென்னை, மார்ச் 13—

பிப். 20-ல் நடைபெற்ற அர்த்தால் பற்றிய கேள்விகள் சென்னை சட்ட சபையில் கேட்கப்பட்டபோது நிதியமைச்சர் சுப்பிரமணியம் பதிலளித்த விபரம்:—

கே:- பிப். 20-ந் தேதி சர்வ கட்சிக் கூட்டணி ஏற்பாடு செய்த அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறதே, இதனால் தமிழகப் பகுதி நமக்குச் சேரவேண்டுமென்பது உறுதிபடுகிறதல்லவா?

ப:- அர்த்தால் வெற்றியா, தோல்வியா என்பது அவரவருடைய அபிப்பிராயத்தைப் பொறுத்தது. அர்த்தால் தோல்வியுற்றதாகச் சிலர் நினைக்கின்றனர்; சிலர் வெற்றியடைந்ததாகச் சொல்கின்றனர். இது உறுப்பினரின் சொந்த கருத்தை யொட்டிய விஷயம். அவரவர்களுடைய அரசியல் கட்சித் தொடர்பை ஒட்டிய விஷயம்.

பிப். 20-ந் தேதி தமிழகத்தில் அர்த்தால் நடைபெற்றதை யொட்டி கள்ளக்குறிச்சி, தம்மம்பட்டி (சேலம்) ஆகிய இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டதெனவும், கள்ளக்குறிச்சியில் இருவருக்கும், தம்மம்பட்டியில் நால்வருக்கும் காயமேற்பட்டதாகவும் கேள்வி ஒன்றிற்கு அமைச்சர் பதிலளித்தார்.

மேலும் அவர் கூறியதாவது:—

"சென்னை நகரம், சேலம், வேலூர் ஆகிய இடங்களில் போலீசார் லேசாக தடியடிப் பிரயோகம் செய்யவேண்டியிருந்தது. அதன் விளைவால் எத்தனை பேர்களுக்குக் காயம் ஏற்பட்டதென்கிற விபரம் சர்க்காரிடம் இல்லை. 20-ந் தேதியன்று மொத்தம் சுமார் 800 பேர்கள் போலீஸ் காவலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சென்னை கோட்டை மைதானத்தில் 20-ந் தேதியன்று பிற்பகல் 3 மணிக்கு சுமார் 5,000 பேர்களடங்கிய கூட்டத்தில் சிலர் பஸ்கள் மீது கல்லெறிந்து சில பஸ் பிரயாணிகளுக்கும், போலீசாருக்கும் காயம் விளைவித்தனர். தடியடிப் பிரயோகத்தின் பின்னரும் கூட்டம் கலைய மறுத்ததால் கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்யப்பட்டது. சேலத்தில் இரயில் வண்டியை நிறுத்திய கும்பல் கலைய மறுத்ததால் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ய நேரிட்டது.

கே: தம்மம் பட்டியில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு அவசியமான நிலை ஏற்படவில்லையெனத் தெரிகிறது இது சம்பந்தமாக விசாரணை செய்ய சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

ப:—நாமக்கல் ரெவினியூ டிவிஷனல் அதிகாரி ஏற்கனவே விசாரணை செய்திருக்கிறார்.

கே:—கள்ளக் குறிச்சியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய அவசியமென்ன?

ப:—கட்டுப்பாடற்ற கும்பல் ஒன்று, சப்-இன்ஸ்பெக்டருக்கும், ஆறு போலீசாருக்கும் காயம் விளைவித்தது. அதனால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி சப்-இன்ஸ்பெக்டர் உத்தரவிட்டார்.

கே:—சென்னைக் கோட்டை மைதானத்தில் கூட்டத்தைக் கலைப்பதில் கண்ணீர்ப் புகை பிரயோகம் திருப்திகரமாக பயன்பட்டிருக்கிறது. ஆதலால், இனி துப்பாக்கிப் பிரயோகத்தைக் காட்டிலும் எல்லா இடங்களிலும் கண்ணீர்ப் புகையையே பயன்படுத்தும்படி சர்க்கார் உத்தரவு பிறப்பிக்குமா?

ப:—எல்லா ஊர்களிலும் போதுமான அளவு கண்ணீர்ப் புகைக் குண்டு இல்லை. அதிகப் படியாகவைக்க அவசியமும் ஏற்படாது என்று எதிர்பார்க்கின்றேன்.

கே:—சுடுவதற்கு முன்பு ஆகாயத்தில் சுட்டு எச்சரிக்கை விடுவது வழக்கமல்லவா? அதுபோல் போலீசார் செய்தனரா? அப்படிச் செய்திருந்தால் கூட்டத்தினர் ஓடிப்போயிருப்பார்களே?

ப:—நேரிடையாக சுட்டிருந்தால் இரண்டு அல்லது மூன்று பேர்களுக்கு மட்டும் சொற்ப காயம் ஏற்பட்டதுடன் நின்றிருக்காது. ஆதலால் போலீசார் வழக்கம் போல், முன் எச்சரிக்கை கொடுத்திருக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறேன்.

சைப்ரஸ் விடுதலை குறித்து ஐ. நா. விவாதிக்கும்

பிரிட்டனுக்கு எதிரான அமெரிக்கக் கருத்து?

நியூயார்க், மார்ச் 13—

சைப்ரஸ் விடுதலைப் போராட்டம் குறித்து ஐ. நா. பொதுச் சபை விவாதிக்க வேண்டும் என்று கிரேக்க நாடு கோரியிருக்கிறது.

அடுத்த செப்டம்பர் அல்லது நவம்பரில், கூடும் ஐ. நா. பொதுச் சபைக்கான, நிகழ்ச்சி நிரலில், சைப்ரஸ் சிக்கலையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கிரேக்க நாட்டுத் தூதுவர், ஐ. நா. பொதுச் செயலாளரிடம் கோரியிருக்கிறார்.

இதற்கு முன்பாக, சைப்ரஸ் விவகாரத்தில் பிரிட்டன் கடைப்பிடித்துவரும் கொள்கையையும், மகாரியஸ் பாதிரியாரை நாடு கடத்தியதையும் கண்டித்து கிரேக்க சர்க்கார், பிரிட்டனுக்கு ஆட்சேபக் குறிப்பு ஒன்று அனுப்பி வைத்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

அமெரிக்கா, சைப்ரசில் ஏற்பட்டுள்ள நிலைகளைக் கண்டு வருந்துவதாயும், கிரேக்க நாட்டிற்குத் தனது அனுதாபம் உண்டென்றும் தெரிவித்திருக்கிறதாம். இது கண்டு பிரிட்டன், திடுக்குற்றுள்ளதாயும், இதற்கு விளக்கம் தருமாறு கேட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

அமெரிக்கா, தொடர்ந்து சைப்ரஸ் மக்கள், பிரிட்டிஷ் சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் கருத்தறிவித்திருக்கிறதாம்.

'நாடு கடத்த உத்தரவிட்டது நாங்களே!'

பிரிட்டிஷ் மந்திரி ஒப்பம்

பிரிட்டிஷ் அரசியலாருடன் திட்டமாக ஆலோசித்தே பின்னரே சைப்ரஸ் 'ஆர்ச் பிஷப்' மகாரியஸ் முதலானவர்களை நாடு கடத்த சைப்ரஸ் கவர்னர் முடிவு செய்தார் என்றும், அம்முடிவை பிரிட்டன் முழுமையாக அங்கீகரித்துள்ளதென்றும் மக்கள் சபையில் காலனி அமைச்சர் தெரிவித்துள்ளாராம்.

'இன்சூர்' கவர்கள் மறைந்த மாயம்!

ரூ. 27,560 மதிப்புள்ள பத்து இன்சூர் செய்யப்பட்ட கவர்கள், குண்டூர் இரயில்வே நிலையத்திலிருந்து மாயமாக மறைந்திருக்கின்றனவாம். மறைந்த கவர்களில் தபால்தலைகளும், கரன்சியும் இருந்தனவாம். இரயில்வே 'மெயில் சர்வீசால்' இந்தக் கவர்கள் 9-ந் தேதி அனுப்பப்பட்டன. மேற்படி இரயில்வே நிலையத்தில் பட்டுவாடா செய்யப்படுவதற்காக வைக்கப்பட்டிருந்தபோது அவை மாயமாக மறைந்துவிட்டனவாம்!

திரு கொச்சியில்...

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

பரசுத் தலைவர் ஆட்சி நிறுவப்படக்கூடும் என்று கருதப்படுகிறது.

காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறியுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஆறு சட்டசபை உறுப்பினர்களும், கூடிய விரைவில் மன்னிக்கப்பட்டு, மீண்டும் காங்கிரஸ் கட்சிக்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டதும், முன்போல் மீண்டும் ஒருமுறை பட்டம் தாணுவை பதவியிலிருந்து விரட்டுவதும் நடைபெறக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

118 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில், ஒருவர் தலைவர்; காங்கிரஸ் 54; (தி. த. நா. கா. 12); கோஷ்டி காங்கிரஸ் 6; கம்யூனிஸ்டு 27; ம. சோ. க. 15; பு. சோ. க. 9; கே. சோ. க. 3; சுயேச்சை 3.

தொழிலாளருக்கு நிர்வாகத்தில் பங்கு

பெங்களூர், மார்ச். 12—

சர்க்காரால் நடத்தப்படும் எல்லா கைத் தொழில்களின் நிர்வாகத்திலும் தொழிலாளர்களுக்கும் பங்கு தருவதென சர்க்கார் முடிவு செய்திருப்பதாக மைசூர் சட்டசபையில் முதலமைச்சர் வரவு-செலவுத் திட்டத்தின்மீது பேசுகையில் கூறியுள்ளார்.

இது சம்பந்தமாக ஒரு திட்டம் தயாரிப்பதற்காக நிர்வாகிகள், தொழிலாளர்களின் பிரதிநிதிகளை அழைத்து விவாதிக்க தீர்மானித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டு பிடித்தனர்!

புதுடில்லி, மார்ச். 12—

ஒரிசாவிலுள்ள பத்து மாவட்டங்களிலும், அசாமிலுள்ள மூன்று மாவட்டங்களிலும் இரும்புக் கனிகள் இருப்பதை நிலத்தத்துவ ஆய்வு இலாகாவினர் கண்டு பிடித்திருக்கிறார்களாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.